சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.5 குமார் த/பெ. சேட்டு**, வயது.40

சாட்சி மனுவின் பேரில் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல்நிலையத்தில் 14.02.2024 ம் தேதி காலை 09.00 மணியளவில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். புகாரை நான் தான் எழுதி கொடுத்தேன். அந்த புகாரில் எதிரிகள் எனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்தார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். முதல் விசாரணையில் எதிரிகள் எனது நெஞ்சின் மீது கத்தியால் குத்தினார்கள் என்று கூறியுள்ளதை எனது புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நான் அளித்த புகார் மனுவில் எதிரிகள் என் மனைவியின் சேலையை பிடித்து இழுத்ததாகவோ கத்தியால் எனது நெஞ்சின் மீது குத்தியதாகவோ நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. என் மனைவி செய்த தவறான செயல்களை மறைப்பதற்காக மிகைப்படுத்தி எதிரியின் மீது பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 14.02.2024 அன்று காலை 09.00 மணியளவில் எதிரியின் மீது புகாரளிக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது மனைவிக்காக நான் எதிரியின் மனைவியிடம் சென்று முறையிட்டேன் என்றால் சரிதான். எனது மனைவி இது குறித்து கேட்கவில்லை என்றாலும் நான் தான் கேட்டேன் என்றாலும் சரிதான். இந்த விவரங்கள் எனது மனைவி கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான் ஊர் ஆட்களும் என்னிடம் கூறினார்கள். எனது மனைவி சமையல் கூடத்தில் வேலை செய்ததை எதிரி வீடியோ எடுத்தார் என்றால் சரியல்ல. போட்டோ மட்டும் எடுத்தார். இது குறித்து எங்கள் ஊரில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அப்போது சமாதானமாக சென்று விட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி எடுத்த போட்டோவை அவர் அழித்துவிட்டார் என்றாலும் நான் பஞ்சாயத்து செய்ததை மீறி விட்டேன் என்றாலும்

சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக நான் எதிரியிடம் வீட்டிடம் சென்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து செய்த நபர்கள் இவ்வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்களா என்றால் இல்லை. எதிரிகள் எனக்க எதிராக அளித்த புகாரின் அடிப்படையில் 71/2024 என்ற வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மாறி அடித்துக்கொண்டதால் எங்கள் இருவர் மீதும் வழக்கு உள்ளது என்றால் சரிதான். என்மீதுள்ள வழக்கிலிருந்து நான் தப்பிப்பதற்காக அதற்கு பின்னிட்டு எதிரிகளின் மீது புகார் அளித்து இந்த வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் அளித்ததற்கு பின்னிட்டு நான் போலீசாரிடம் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் விசாரித்த போது கையொப்பம் செய்தேன். போலீசார் காவல் நிலையத்தில் என்னை விசாரித்த போது என்னுடன் எனது மனைவி மற்றும் தருமன், சுதா, பிரபாவதி, சிவா ஆகியோர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது விசாரணை செய்து அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிப்பதற்காக அவர்களை காவல் நிலையம் அழைத்துச் சென்றேன் என்றால் சரிதான். எதிரியை நான் காயப்படுத்தியதை மறைப்பதற்காக எனக்கு நானே காயம் ஏற்படுத்திக் கொண்டு எதிரிகளின் மீது பொய்யான வழக்கை தொடுத்துள்ளேன் என்றாலும் எனது மனைவியின் மீது இருந்த தவறினை மறைப்பதற்காக இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.07.21 18:38:20 +0530

Judicial Magistrate No.II,

Tirupathur.